வீரச் செயல்களுக்குப் பாராட்டு.

*வினா எண். 735— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வாருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1971 டிசம்பர் மாதத்தில் மதுரையில் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்ட 20 பேர்களைக் காப்பாற்றிய மதுரையைச் சேர்ந்த நீச்சல் வீரருக்கு உதவிகள் செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மதுரையைச் சேர்ந்த திருவாளர்கள் பி. காத்தான், கே. செல்லையா அவர்களின் வீரச்செயலை பாராட்டும் வகையில் இந்தியக் குடியரசுத் தலைவரின் ''ஜீவன்ரக்ஷா'' உயிர் காக்கும் பதக்கமும், ஒவ்வொருவருக்கும் ரொக்கப் பணமாக ரூபாய் 500-ம் வழங்கப்பட்டது. மேலும், அரசு தீயணைப்புத் துறையில் விதிமுறைகளைத் தளர்த்தி தீயணைப்பாளர்களாக இவ்விருவரும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மதுரையைச் சேர்ந்த திருவாளர்கள் பி. காத்தான், கே. செல்லையா அவர்களின் வீரச்செயலை பாராட்டும் வகையில் இந்தியக் குடியரசுத் தலைவரின் '' ஜீவன்ரக்ஷா '' பதக்கமும், ஒவ்வொருவருக்கும் ரொக்கப் பணமாக ரூபாய் 500-ம் வழங்கப்பட்டது. மேலும், அரசு தீயணைப்புத் துறையில் விதிமுறைகளைத் தளர்த்தி அவர்களைத் தீயணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் ; தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் மதுரையில் வைகை ஆற்றில் பெருவாரியான வெள்ளம் வந்து மக்களும் பொருட்களும் அடித்துச் செல்லப்படுவதை யாரும் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், பல உயிர்களைக் காப்பாற்றத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்த மதுரை நீச்சல் வீரர் காத்தான், மாவட்ட ஆட்சியரிடம் கேட்டு ஒரு சைக்கிள் டியூபை வாங்கி தனனுடைய இடையிலே கட்டிக்கொண்டு வெள்ளத்தில் சென்று 20 பேர்களைக் காப்பாற்றியிருக்கிறார். அவருக்கு யாதொரு உதவித் தொகையும், பாராட்டும், பரிசும் கிடையாது. நத்தம் தீயணைப்பு நிலையத்தில் அவர் பணியாற்றுகிறார். அந்த வீரருக்கு உதவி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகத்திலே வேலை செய்ய வேண்டுமானால் கல்வியைப் பார்க்க வேண்டும். வயதைப் பார்க்க

வேண்டும், உடலமைப்பைப் பார்க்க வேண்டும். இவைகளெல்லாம் அவர்களுக்குத் தள்ளுபடி செய்து, தீயணைப்பு அலுவலகத்தில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 500 ரூபாய் ரொக்கப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் பதக்கம் என்பது உயர்ந்த பதக்கம். அதுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலம், வீடு குறித்த பத்திரப் பதிவு.

வினா எண் 736,—*திரு. டி. ஆர். ராஜாராம் ரெட்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

போட்டி முதலான காரணங்களால் எங்கே ஓரிடத்தில் கூடுதலான விலைக்கு நிலமோ வீடோ விற்கப்படும்போது பக்கத்தில் உள்ளவைகளுக்கும் அதே விலைக்குச் சரியான அளவு பத்திரங்களில் எழுதி வருமாறு கூறி ரிஜிஸ்தரார் பதிய மறுத்து கூடுதல் பத்திரங்கள் சேர்க்கும்படி கட்டாயப்படுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, பதிவு அலுவலர்கள் யாரும் அப்படிக் கட்டாயப்படுத்தி அதிகமாகக் கட்டணம் கேட்கவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இப்பொழுது கிராமங்களில் ரெஜிஸ்தார் ஆபிசிலே—நான் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் பல தவறுகள் நடக்கின்றன. ரெஜிஸ்தர் செய்வதில் பல தவறுகள் நடக்கின்றன. அந்த முறையை மாற்றி வேறு விதமாக அரசு பரிசீலனை செய்து அல்லது நடவடிக்கை எடுத்து, ஏதாவது ஒன்றைச் செய்ய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ''ஏதாவது ஒன்றை'' விரைவாகச் செய்ய இந்த அரசு என்றைக்கும் முன் வராது. நல்லது எது என்று சொன்னால் அதைச் செய்ய முன்னுக்கு வரும். தவறு நடக்கிறது என்றால் என்ன தவறு என்று சொன்னால் அதைப் போக்கடிக்க இந்த அரசு ஆவன செய்யும். தவறு என்று பொதுவாகச் சொல்வது, அதுவும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்வது சரியல்ல.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் ஒரு பத்திரப் பதிவுக்குக் கூடுதலான அளவு முறை வைத்திருக்கிறார்கள். அந்த அளவு முறைகளை மீறிச் சில குறும்புகாரர்கள் அதிகப்படியாக 100 ரூபாய்க்குப் பதில் 1,000 ரூபாய்க்குப் பதிந்து விடுகிறார்கள். அதேபோல் பக்கத்திலே உள்ளவர்களும் பதிய வேண்டுமென்று சொல்லுகின்ற